Registered at The G P O Colombo As A Newspaper.

# திராவிடன்

பதிவுசெய்யப் பெற்றது
பத்திராசிரியர்

| சந்தா விளம்பரம். | |
| --- | --- |
| தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு | ரூ. 1-00 |
| தபாற்செலவு உட்பட | ரூ. 1-25 |
| மலாய்நாட்டிற்கு | ரூ. 2-50 |
| வி. பி. சார்ஜ் பிரத்தியேகம் | |
| தனிப்பிரதி 10 சதம். | |
| முற்பணமாகவே அனுப்பவேண்டியது. | |

## THE DRAVIDAN.

A Monthly Newspaper.

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற் கோடாமைசான்றோர்க்கணி."

| விளம்பர விகிதம். | |
| --- | --- |
| 1 கலம் முதன்முறை | ரூ. 4 50 |
| ¾ " " | ரூ. 3 00 |
| ½ " " | ரூ. 2 50 |
| ¼ " " | ரூ. 1 50 |

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு கட்டவேண்டும்.

புத்தகம்—2. { யாழ்ப்பாணம்-சுன்னாகம்:-விபவ ஞு வைகாசிமீ ௧௯௨ (1928 ஜூன்மீ 1) வெள்ளிக்கிழமை. } இலக்கம்—4.

உ
கடவுள் துணை.

அங்கிங்கெனுதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்காய்
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம்.

## சீன ஜப்பானிய போர்.

உலகத்திலே திரும்பவும் ஒரு பெரும் போர் தோன்றி உலகத்தைக் கலவழிப்படுத்தப் போகிறதென சில அறிஞர்கள் கூறுகின்றார்கள். சிலகாலமாகப்புகைந்துகொண்டிருந்த சீனஜப்பானியப் போர் மீண்டும் தொடங்கியிருக்கிறது. இந்தியாவின் எல்லைப்புறத்தில் பிரிட்டிஷார் பெரும்போருக்குரிய முயற்சிகளைச் செய்துகொண்டிருப்பதாக வதந்தியேற்பட்டிருக்கிறது. எல்லைப் புறத்திலுள்ள பழைய கோட்டைகளைக் கட்டுவதாகவும் சொல்லுகின்றார்கள். டில்லியில் அறுபதினாயிரம்பேர்களைச்சேர்த்து வாசிரிஸ்தான், பெலுக்கிஸ்தான் பகுதிகளுக்கு அனுப்பியிருக்கின்றார்களாம். ஆகாயவிமானங்கள் வழக்கமாயிருப்பதுடன் ஆகாயவிமான விடுதிகளும் கட்டுகிறார்களாம். ருஷியாவிலுள்ள சோவியத் அரசாங்கத்துடன் போர் தொடங்குவதற்காகச் செய்கிறார்களென்று சொல்லுகிறார்கள் ஆனால் இந்தச் செய்திகள் எவ்வளவுதூரம் உண்மையென்பது தெரியவில்லை.

## பஞ்சத்தினுற் பெற்றோர் குழந்தைகளை விற்றனர்.

வங்காளத்தில் தினஸ்பூர் ஜில்லா பாலூர்க்காட் தாலுகாவில பல பகுதிகளிலும் கொடிய பஞ்சம் பரவியிருக்கின்றதாம். சோறில்லாமல் மட்டும் மக்கள் வருந்தவில்லை. நீர்கூட அங்கே கிடைக்கவில்லையாம். குளம் குட்டைகள் வரண்டு கிடக்கின்றன. குழந்தைகள் படும் துன்பத்தைக் காணமுடியாமல் பெற்றோர்கள் தற்கொலைபுரிந்து கொள்ளுகிறார்களாம். போவாலியென்னும் கிராமத்தில் ஒருவர் தமது நான்குவயதுக்குழந்தையைக் கத்தாலியென்னும் கிராமத்திலுள்ள ககர் மொண்டால் என்பவருக்கு நாலு ரூபாய்க்கு விற்றுவிட்டாராம். சுரிகூர் கிராமத்தைச் சேர்ந்த விஜயசர்க்கார் என்பவர் இதிஷா என்னும் கிராமத்திலுள்ள நித்யதாஸி என்பவனிடமிருந்து ஒன்றரை வயதான ஓர் ஆண்குழந்தை, மூன்று வயது, ஐந்து வயதான இரண்டு பெண் குழந்தைகள் இவற்றை ரூபா 24 க்கு வாங்கினர். ஓர் முகமதியர் இவற்றிற்கெல்லாம் 40 ரூபா கொடுப்பதாகக் கூறியும் தாயார் தன் குழந்தைகளை முகமதியருக்குக் கொடுக்கமுடியாதெனக் கூறிவிட்டாள்.

கான்பூரைச்சேர்ந்த அமீர்மண்டல் என்பவன் எப்படியோ தட்டுத்தடுமாறி யாரிடமிருந்தோ ஒரு ரூபாவைக் கடனாகப் பெற்றுக்கொண்டு அரிசிவாங்குவதற்காகக் கடைக்குச் செல்லுகையில் அவனது பழையகடன் காரர் பலர் அவனைச் சூழ்ந்துகொண்டு அவனிடமிருந்த பணத்தைப் பிடுங்கிக்கொண்டனர். வெறுங் கையுடன் வீடுதிரும்ப மனமில்லாது அமீர்மண்டல் ஓர் மரத்தில் தன்னைக் கட்டித் தொங்க விட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொள்ள எத்தனித்து உயிர்போகும் தருவாயிலிருக்கையில் யாரோ அப்பக்கமாகச்சென்ற ஒருவன் அவனைக் காப்பாற்றினன். சென்ற வாரத்தில் சென்னையை அடுத்த தொழூரில் ஒருதாய் வறுமைக்கொடுமையால் தனது இரு குழந்தைகளையும் கிணற்றிலே போட்டுத் தானும் கிணற்றில் விழுந்து உயிர்துறந்தாள்.

## அமெரிக்காவும் நீதியும்.

விஷ்ணுதாஸ் என்னும் வட இந்தியர் ஒருவர் அமெரிக்கா சான்பிரான்ஸிஸ்கோ நகரத்தில குடியேறிச் சித்திரப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார். அவர் பொருள் ஈட்டி நிலம் வாங்கி நல்லவாழ்க்கை நடத்திவந்தார். இந்தியாவிலுள்ள தமது நிலம் புலங்களையெல்லாம் விற்று இருபத்தையாயிரம் (தங்க) டாலர் கொண்டுபோய் அமெரிக்காவிற்குடியேறினார். அவருக்கு அழகான மனைவியும் நல்ல குழந்தைகளும சிறந்த நண்பர்களும் இருக்கிறார்கள். 1921 ஆண்டில் ஸான்பிரான்ஸிஸ்கோ நகரத்திலுள்ள நீதிஸ்தலத்தார் அவரை அமெரிக்க நாட்டுக்குடிகளில் ஒருவராக ஏற்றுக்கொண்டார்கள் ஆனல் இப்பொழுது அமெரிக்க அரசாங்கத்தார் விஷ்ணுதாசரை அமெரிக்கக் குடியல்லவென்று சொல்லி அவர் அமெரிக்காவில் வீடுவாங்கக் கூடாதென்றும் சொல்லிவிட்டார்கள். அவர் இந்தியாவுக்கு திரும்பவரவேண்டுமென்றால், அதற்கும் அனுமதிச்சீட்டுக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இந்த நிலைமையில் விஷ்ணுதாசர் மனம் உடைந்து தாம் ஈட்டிய செல்வத்தையும் வீடுவாசல்களையும் அருமை மனைவிமக்களையும் விட்டுத் தற்கொலை செய்துகொண்டார். அமெரிக்காநாட்டு அநீதிபற்றி வருந்திக் கொலைபுரிந்துகொண்ட விஷ்ணுதாசர் இறுதியாக எழுதிவைத்த கடிதம உள்ளத்தை உருக்குவதாயிருக்கிறதாம். இதுதான் நீதிக்குமேல்நீதி: (லோகோபகாரி.)

## முழங்காலுக்கு நகையணிதலே நாகரீகம்.

### பாரிஸ் நாகரீகமும் முழங்கால் நகையணிதலும்.

புதியநாகரீகம் பாரிஸில் ஏற்பட்டிருக்கிறதாம். அது முழங்காலுக்கே நகையணிந்து கொள்ளுதலாம். விலையேறப்பெற்ற வைரங்கள் இரத்தினங்கள் முதலியவை பொருத்தப்பட்ட தங்கக்காப்புகளை பாரிஸ் பெண்கள் முழங்கால்களில் அணிந்து வருகின்றார்களாம். அவர்கள் உடுத்தும் பாவாடை வரவரக் குட்டையாகி வருவதால் நடனமாடும் பொழுது மேற்படி முழங்கால் நகை மறைந்தும் வெளிவந்தும ஒளிவீசுமாம் இம்முழங்கால்களில் அணியப் பெறும் சிலரின் நகைகள் லட்சக்கணக்கில் பெறுமதியுள்ளவையாம்.

## தானே பாடும் சத்தியையுடைய யாழ்.

பிரான்சுதேசத்திலுள்ள இரண்டு என்ஜினீயர்கள் எந்தப்பாட்டையானுலும் பாடும் சக்தியுடைய நூதனமான ஒரு யாழைச் செய்திருக்கிறார்கள். இந்த யாழைச்செய்து முடிப்பதற்குச் சுமார் பதினெட்டு வருஷகாலம் அவர்கள் பிரயாசப்பட்டனர் எனத்தெரிகிறது. மின்சாரசக்தியின் உதவியைக்கொண்டு யாழின்கோல் முன்னுக்கும் பின்னுக்கும் செல்லும். அந்த அதிசயமானயாழைப் பார்ப்பதற்கு அனேகர் ஆவற்படுகின்றனராம்.

## ஒருசிறுபெண் புகைரதத்திலிருந்து தவறியமை.

சென்ற சில தினங்களுக்குமுன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த புகைரதத்தில் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பிரயாணஞ்செய்த எட்டுவயதுப்பெண்பிள்ளையொன்று கல்கமுவாவுக்கும் தம்புத்தகாமாவுக்குமிடையில கீழே விழுந்துவிட்டதாம். இப்பிள்ளை பெற்றாருடன் பிரயாணஞ்செய்துகொண்டிருக்கும்பொழுதுதுப்புவதற்காகக்கதவினண்டைசென்றபொழுது பூட்டப்படாதிருந்த கதவு திறபட்டதும் பெண்கீழே எறியப்பட்டாள். அதினல் பெண்ணின் முகத்திலும் கைகளிலும் கடுங்காயம் ஏற்பட்டது. ஆபத்தையறியப்படுத்தும் சங்கிலி இரண்டு அறைகளிலிழுக்கப்பட்டும் அதினுற்பிரயோசனமின்றி முதலாவது வகுப்புவண்டியிற் சென்று அங்கேயுள்ள சங்கிலியை இழுத்துப் புகைரதத்தை நிறுத்தச்செய்தனர். இதற்கிடையில் புகைரதம் இரண்டு மைல் தூரம் வந்துவிட்டது. புகைரதம் மறுபடி பின்னுக்குச் செலுத்தி அறிவிழந்த நிலையிலிருந்த அச்சிறுமியை எடுத்துக்கொணர்ந்து அனுராசபுர வைத்தியசாலையில் விட்டனராம்.

## வள்ளுவ விகடன் எழுதும் நவரசம்.

ஒருவன் ஒருவித சித்திரம் எழுதத் தொடங்குமுன் அதற்கு வேண்டிய மைகளை சேகரித்துக் கொண்டே மேற்படி சித்திரத்தைத் தீட்டுகின்றன். அதுபோலவே ஏழைகளாகிய பெற்றோர் தம் சிறுவரின் கல்வி விஷயத்தில் ஏனைய பாகங்களைப் போல் நாகரீகத்தில் அலங்காரமாய் விளங்க வேண்டுமானல் நாமும்சில மைகளை நீக்கியும் சிலவற்றைச் சேர்த்துக் கொள்ளவும் வேண்டுமென்று விகடன் கூறுகின்றன்.

தாய்ப் பாஷையாந் தமிழில் வெறுப்பும் அந்யபாஷையாம் ஆங்கிலத்தில் விருப்பும் ஏற்பட்டு இருக்கின்றது. பணம் சம்பாதிப்பதற்கே யன்றி வேறெதற்கும் ஆங்கிலத்தைக் கற்பதில்லை யென்பதை ஒவ்வொருவரும் அறிவார்கள். ஆங்கிலத்தையே படிக்க வேண்டாமென யாரும் இங்கு சொல்ல வாவில்லை. ஆங்கிலம் நங்காருண்ய "பிரிட்டிஷ்" ராஜாங்கத்தாரது பாஷை யாதலின், அதன் பிரஜைகளாய் நாம் அப்பாஷையைக் கற்கவேண்டிய தவசியமே. அது நங் கடமையே.

சென்ற. மதி. யாழ்ப்பாணம் முற்றவெளியில் கள்ளுக்கூட்டம் ஒன்று கூடினர்கள். எப்படியும் கள்ளு யாழ்ப்பாண நாட்டைவிட்டகலாதிருக்கு ம்படியாகவே தாம் வாதாடுவதாகவும் சனத்தலைவர்களை தேசத்துரோகிகளென்றும் நாட்டின் சத்துருக்களென்றும் ஏழைகளின் நன்மைக்கும் சீவியத்தின் முன்னேற்றத்திற்கும் மது இன்றியமையாது வேண்டப்படுவதென்றும் பேசினராம். இப் பேச்சு முயற் கொம்புக்கும்" நக்குகின்ற நாய்க்கு செக்கென்ன சிவலிங்க மென்ன என்றற்போல இத் தீமை பயக்கும் கள்ளினலே ஏழைகளின் சீவியமும் குடும்பங்களும் கேடடைந்து வறுமைக்குள் மாட்டியிருந்த எத்தனையோ குடும்பங்கள் இம்மது நீக்கியதின் பின்னர் சிறப்புடன் சந்தோஷமாய் வாழ்ந்து வருவதை யார் மறுப்பார். இவைகளையெல்லாம் மறைத்து கள்ளேற்றினலே ஏழைகள் முன்னுக்கு வருதல் கூடுமெனக் கூறுதல் மதுவருந்துபவனுக்கிணங்கிய பேச்சேயன்றி மற்றப்படிக்கில்லையன்றே.

நமது தேகத்தில் தனித்தனியாக இருநூற்று ஐம்பத்திநான்கு எலும்புகள் இருக்கின்றனவாம். நமது இருதயம் ஐந்து அங்குல நீளம் மூன்றரை அங்குல அகலம் இரண்டேகால் அங்குல கனம் உள்ளதாயும், தேகத்திலுள்ள எல்லா அவயவங்களைவிட சுறுசுறுப்பாய் இருபத்திநான்கு மணியும் வேலை செய்து கொண்டிருக்கிறது. நமது தேகத்தில் ஸதா ஓடிக் கொண்டிருக்கும் ரத்தத்தின் வேகம் மணிக்கு ஏழுமைல் விகிதமாம். நமது தேகத்தில் மொத்தம் நானூற்றிருபது நரம்புத் தசைகளாம். சரியான தேக சவுக்கியமுள்ள ஒரு மனிதனுக்கு ஒரு நிமிஷத்திற்கு எழுபத்தைந்து முதல் எண்பது வரையில் நாடியடிக்குமாம். புருஷர்களை விட ஸ்திரிகளுக்கு இன்னும் வேகமாக நாடியடிக்குமென்று ஒரு அறிஞர் கூறுகின்றார்.

யாழ்ப்பாணம் தாழ்த்தப் பட்ட சாதியாரென விளங்கும் இவ் வகுப்பார்களுக்குள்ளும் உயர்வு தாழ்வு என்னுங் கொள்கையை கற்பித்து வித்தியாசத்தை மூட்டி இவ்வகுப்பாளர்களைப் பிரித்து வைக்கும் நோக்கங் கருதி சில அறிஞர்கள் வெளியிற் பேசுகின்றார்கள். இச்சூதான வாக்கியத்தை உணர முடியாத ஏழைமக்கள் செய்வதென்ன.

ஓர் அரும்பானது புஷ்பித்தங்கால் அதன் சுகந்தம் பக்கங்களிலெல்லாம் பரிமளிக்கின்றது. அதுபோலவே மோக்ஷ இச்சையுடைய ஒருவன் ஞானியாகுங் காலத்து அவனுடைய சுத்த வாசனையானது சுற்றெல்லாம் வியாபிக்கின்றது.

கரும்பின் ருசியை யானை அறியுமே அன்றிக் கழுதை அறியாது. அது போன்றே முற்றத் துறந்த ஞானிகளின் தன்மையை விவேகிகள் அறிவார்களே யன்றி மூடர்கள் அறியார்கள்.

ஓர் பாதையில் சென்று கொண்டிருந்த பிரயாணி ஒருவன் வழியில் ஒரு முற்றின தேங்காய் கிடக்கக் கண்டான். அவன் அத்தேங்காயைக் கையில் எடுத்துச் சுற்றிசுற்றிப் பார்த்தான். அதில் ஒன்றுமில்லையெனக் கண்டு அவ்விடத்திலேயே அதை யெறிந்து விட்டுச் சென்றன். அவ்வழியே இரண்டாவதுசென்ற இன்னொருவன் அதைப் புரட்டிப் பார்த்து அதில் ஏதேனும் புசிப்பதற்கு இருக்குமென்றெண்ணி அதைத் தன் பல்லினல் கடித்துச் சிறிது பாகம் உரித்து விட்டான். ஆயினும் அவனுடைய பல்லில் ரத்தம் வந்து விட்டமையால் அதற்கு மேல் உரிக்க முடியாமையால் அதில் ஒன்றும் இருக்காதென நினைத்து அதை அவ்விடத்திலேயே வீசிவிட்டுச் சென்றன். அதே வழியில் மூன்றாவதாகச் சென்ற மற்றொருவன் கண்டு தன் பசிக்குதவக்கூடிய ஏதேனுமொன்று அதனுள்ளிருக்கலாமெனக் கருதி தன் பல்லினலும், கையினலும் கூடியவரை உரித்து மிஞ்சியிருந்த சவுரியையும் எடுத்து விட்டான். சவுரியை எடுத்துவிட்டுப் பார்த்தபொழுது அந்த சிரட்டையைக் கண்டான். ஆ! ஆ! மோசம்போனேமே. இதற்காக எவ்வளவு பிரயாசப்பட்டோம்? இது கல்லுப் போலிருக்கின்றதே. இதனல் என்ன உபயோகம்." என்று நினைத்து அவனும் அதை அவ்விடத்திலேயே போட்டுவிட்டுப் போயினன். நான்காவதாக அவ்வழியே அரிவாள் கொண்டுசென்ற ஒருவன் அத்தேங்காயைக் கண்டு அதை அரிவாளினல் உடைத்து உள்ளிருக்கும் பருப்பைக் கீறித் தின்று திருப்தி யடைந்தான். இதுபோன்றே மனித சென்மத்திற் சிற்சிலர் சச்சிதானந்தக் கடவுளின் சொரூபத்தை மூடியிருக்கும் நாமரூபத்தை பிரித்தெடுக்கச் சிறிது சிறிது முயன்றும் அம்மட்டில் நின்றுவிடுகிறார்கள். ஞானசாதனம் கொண்டு செல்லும் ஒருவனே அச் சாதனத்தினல் நாம ரூபத்தைத் தள்ளி கடவுளை அடைகின்றன். சுபம்.

## மங்கையர் கல்வியும் அதன் மாண்பும்?

—:*:—

சகோதர! சகோதரிகளே!

இல்வாழ்க்கைக்குத் துணையாயுள்ள மனைவியை வாழ்க்கைத் துணைவியென நாயனர் பேரிட்டிருக்கின்றனர். இல்வாழ்க்கையென்னும் சொற்றொடரில் (உள்ள இல் என்னும் பதம் 'மனையாளையே குறித்து நிற்கும். இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத துணை இல்லாளென்பது நன்றாக விளங்கும். இவ்வாறு இல்வாழ்க்கைக்குத் துணையாயுள்ளவள் நற்குண நற்செய்கை யுடையவளாயின் அவ்வில்வாழ்க்கை பெருமையுடையதாக விளங்கும். நற்குண நற்செய்கையில்லாதவளாயின் அவ்வில்வாழ்க்கை பொருளாலும் புகழாலும் எத்துணைப் பெருமையுடையதாயினும் ஒன்றுமில்லாததாகி விடும். இப்பொருளை நாயனரும் (இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென் இல்லவள் மாணுக்கடை) எனக் கூறியுள்ளார் அதாவது துற்காப்பேணலும் விருந்தயர்தலும், வறி

தொடர்ச்சி 4-ம் பக்கம்.

## பொதுச் சமாசாரம்.

### காலநிலை.

காற்று உரமாக வீசுகின்றது. வெயில் அகோரம் தணிந்தபாடில்லை. மழை இல்லாது நீர் நிலைகளிலும் தண்ணீர் குறைந்து கொண்டே வருகின்றது. ஊரில் பலவகையான நோய்களும் பரவுகின்றன.

---

அமிர்தசரசில் ஒரு இந்துப்பெண் காளிகோயிலுக்குப்போய்த் தேவியைப் பூசித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிவந்துகொண்டிருக்கும்பொழுது ஒரு துலுக்கவாலிபன் அப்பெண்ணைத் தாக்கி அவள் மூக்கை அறுத்து விகாரப்படுத்திவிட்டானாம்.

---

பம்பாயை அடுத்த சேவ்ரியில் பருத்திக் கிடங்கில் சென்றுபோன திங்கள் இரவு ஒரு தீவிபத்து ஏற்பட்டதில் 2800 பஞ்சுப்பைகள் எரிந்து விட்டனவாம். பருத்திமுதலாளிகள் இன்சூர் செய்திருந்தமையால் அவர்களுக்கு நஷ்டமில்லையாம்.

---

மாஜி இந்தூர் மகாராஜாவின் அமெரிக்க மனைவியான மகாராணி சர்மிஷ்டா தேவி தமது புருஷருடன் சமீபத்தில் அமெரிக்காவுக்குச் சென்று இந்துமதப்பிரசாரஞ் செய்யப்போகிறாராம். அமெரிக்கர்கள் பலரை இந்துக்களாக்கலாமென்று சர்மிஷ்டாதேவி கருதுகிறாராம்.

---

ஆஸ்திரேலியாவில் தொட்டாற்கொல்லி யென்னும் ஒருவிதமான பெரியமரமிருக்கிறது. யாராவது அதன் இலைகளைத் தொட்டால் அவர்களைத் தன்னிடத்தே இழுத்துக் கொன்றுவிடுமாம்.

---

சீனதேசத்திலுள்ள காசல்ஸ் என்னும் மிருகமும் பட்டகோணியாவில் வசிக்கும் லாமா என்னுமிருகமும் தண்ணீர் அருந்துவதேயில்லையாம். அவை தாகத்தினாலும் வருந்துவதில்லையாம்.

---

புதுச்சேரியை அடுத்த கூசிட்டேரியில் சில தினங்களுக்குமுன் 24 வயதுள்ள வாலிபனொருவன் தான் பிடித்த ஒரு சென்னல் மீனைப் பல்லில் கடித்துக்கொண்டு வேறு மீன்களைப் பிடிக்கும்பொழுது கடித்துக்கொண்டிருந்த மீன் அவனின் வயிற்றுக்குள்ளே போனதால் வயிறு பெருத்து வைத்தியஞ் செய்தும் பயன் படாமல் உயிர்துறந்தானாம்.

---

கதிர்காமத்தையா வென்னும் சிவியாதெருச் சுவாமியார் சென்ற சில தினங்களுக்கு முன் சிவியாதெரு காச்சிமார்கோயிலில் தீக்காவடியெடுத்தனராம் அப்பொழுது நூற்றுக்கணக்கானோர் சமூகமாயிருந்தனராம். அங்கு வந்திருந்தோரில் பத்துப்பேரைத் தன்னுடன் தீயில் இறங்கும்படி உத்தரவு செய்தார். அவர்களும் அவரின் கட்டளைப்படி தீயின்மேல் நடந்தனராம்.

---

சிவத்தியானந்த பார்ப்பன மகரிஷி இரண்டாவது ஏமாற்றம், தமிழ்நேசன் பத்திரிகை நயவஞ்சகம், தமிழ்நேசன பத்திரிகையின் தற்புகழ்ச்சியும் ஜாதிக்கொள்ளையும் என்னும் இரு பிரசுரங்களுங் கிடைக்கப் பெற்றோம். இது மலாய்நாடு செந்தூல் ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்களால் செய்யப்பெற்றது. இதன் ஆசிரியர்களுக்கு ஸ்துதி கூறுகின்றோம், சுபம்.

---

### குடியரசு.

இது ஓர் வாரப் பத்திரிகை. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருகின்றது. பொது நன்மைக்கான பலவிஷயங்களைத் தைரியத்துடன் எழுதி வெளியிடும் அரிய பத்திரிகை உண்மை அன்பு அஞ்சாமை என்னும் நோக்கத்துடன் வெளிவருகின்றது. இதன் வருட சந்தா உள்நாட்டுக்கு வருடம் ரூபா 4 வெளிநாட்டுக்கு ரூபா 5. வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும் "குடியரசு பத்திரிகை" காரியாலயம் 85 மாதாக்கோவில் வீதி, காரைக்கால். இப் பத்திரிகையின் ஆசிரியரவர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

---


### விளம்பரம்.

சென்றமீ 15உ பின்னேரத்திலிருந்து தெல்லிப்பழை மிஷன்பாடசாலையில் 7-ம வகுப்பிற் படித்துக்கொண்டிருந்த இ. நடேசலான் என்னும் 14 வயதுப்பையனைக் காணவில்லை பொது நிறசிவலை, தலை சிலுப்பா, 4 அடி உயரம், நீண்டமுகம், சிவந்த பெரிய கண்கள், முன்தலையிற் சமீபத்தில் இளைப்பிடித்த தழும்பு, எவர்களிடமும் கூசாமற் பேசுந் தன்மையும் சுறுசுறுப்புமுள்ளவன், வலது தோளிற் கறுப்படையாளம். தயவு செய்து இந்தப்பையனைக் கண்டு பிடித்தோர் பின்வரும் விலாசக்காரனுக்கறியத் தரும்படி கேட்கிறேன்.

இ. சின்னத்தம்பி பேசன்,
பழை, தெல்லிப்பழை, Post.


## நாற்றிசை நோக்கு.

—:o:—

### ஏழாலை சைவவிர்த்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம்.

சென்றமாசம் ஏழாலை சாழ்த்தப்பட்டவர்களின் சைவவிர்த்திச்சங்கத்தின் ஆதரவில் இந்துசாதன ஆசிரியர் ஸ்ரீமான் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களால் ஆலயவழிபாடென்னும் விஷயமாக ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அத்தருணம் சபையில் கூடியிருந்த யாவரும் ஆனந்தித்தனர். பின் பிறக்றர் ஸ்ரீ S. கனகராயர் அவர்களாலும் ஸ்ரீ A பொன்னையா அவர்களாலும் ஸ்ரீ M சிற்றம்பலம் அவர்களாலும் குறிப்புரை கூறப்பட்டது தேவாரபாராயணத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

### மதுபரிபாலனப்பகுதியாரின் அடக்கு முறை.

குருடன்கையில் கோல்கொடுத்த பான்மையாக இலங்கை மதுப்பகுதி உத்தியோகஸ்தர்கையில் அவர்களின் தற்காப்பின்பொருட்டுத் துப்பாக்கியும் குறுந்தடியும், பொலிஸ் பகுதியாருக்குக் கொடுத்திருப்பதுபோற் கொடுப்பதற்கும் வேண்டிய காலத்தில் அவற்றை உபயோகித்தற்கு அதிகாரம் கொடுப்பதற்கு அரசினர் நிச்சயித்திருக்கின்றனராம்

### 18 வயதுடைய வாலிபனின் பரிதாபக் கொலை.

சுன்னாகம் சந்தைக் கருகாமையிலிருக்கும் தம்பிராசா என்னும் வாலிபனுக்கும் மச்சான்மார் இருவருமாக மூவருக்குமிடையே எழுந்த வாக்குவாதத்தினிமித்தம் நாகக்கத்தியால் தம்பிராசாவின் நெஞ்சில் வெட்டிவிட்டனர்; தம்பிராசாவையும் இவர் மச்சான் செல்லையாவையும் அரசினரிடத்தில் அதிகாரிகளால் ஒப்புவிக்கப்பட்டது பின் ஒருமணி நேரத்தில் தம்பிராசாவின் உயிர் நீக்கப்பெற்றது மற்ற மச்சான் கார்த்திகேஸ் கோட்டு மூலமாகத் தெரிபட்டனராம். இப்பொழுது செல்லையாவும் கார்த்திகேஸ் என்னும் இருவரும் அரசினரின் காவலில் இருக்கிறார்கள்

### பழையபடி கள்ளு.

சென்ற வாரத்தில் நூற்றுக்கு 60 விகிதம் பானேரின் சம்மதம் பெற்று பின்வரு இடங்களிலுள்ள கள்ளுத் தவறணைகள் திறக்கப்படுமென நிச்சயிக்கப்பட்டன 1-மாசார், 2 கிளாலி, 3-எழுதுமட்டுவாள வடக்கு 4-எழுதுமட்டுவாள் தெற்கு, 5-மிருசுவில் விகிதம் போதாமையினால் திறக்கப்படாதொழிந்தன பாலாவி, அல்லாரையென்னு மிரண்டுமாம்.

### நூதன வாத்தியக்கருவி.

அபூகசர்வார்பி என்பவர் நூதனகருவியொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார் அவர் ஒருமுறை சபைத்தெனலா என்னும் அரசரின் சபையில் அக்கருவியைத் தட்டி வாசித்தார்; அதன் தொனியைக் கேட்டவுடன் அங்குள்ளவெல்லோரும் சிரிக்கத் தொடங்கினார்கள்; மறுபடியும் அக்கருவியை வேறுவிதமாய் வாசிக்கத் தொடங்கினர்; அப்பொழுது அங்குள்ளாரனைவரும் அழ ஆரம்பித்தார்கள்; மீண்டும் திரும்பி வேறு விதமாய் வாசிக்க ஆரம்பித்தபோது அங்கிருந்தவர்களெல்லோரும் நித்திரையாய்விட்டார்கள்.

### ஜானகியம்மாள் என்னும் கன்னிகை தீயில் குதித்தமை.

மலையாளத்தில் காலஞ்சென்ற நீலாப்பூர் பெரிய ராஜாவின் மூன்றாவது மகளான 18வயதுச் ஜானகியம்மாள் சில தினங்களுக்கு முன் மாஞ்சேரியை அடுத்த ஊரில் நள்ளிரவில் எழுந்து தங்கள் அரண்மனைக் குழக்கில் நீராடித் தோட்டத்தில் அடுக்கியிருந்த விறகில் நெருப்பை வைத்து தனது உடையில் மண்ணெண்ணெ யூற்றி நனைத்துக்கொண்டு எரிகின்றதீயில் குதித்துவிட்டனளாம் கன்னியாயிருந்த அப்பெண் தான் தீப்பாய்வதற்குரிய காரணத்தை விளக்கி ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தனளாம் அதன் விபரம் தெரியவில்லை.

### 18 வயதுடைய பெண்ணின் காதுகளிலிருந்து பூச்சிகள் வெளிவருதல்.

மத்திய திருவாங்கூரில் தேவாலகதரை என்ற ஊரில் ஒரு மாதின் காதுகளிலிருந்து இரண்டொட்களுக்கொருமுறை புதுமையான ஓர்வகைப் பூச்சிகள் வெளிவருகின்றனவாம். சில வேளைகளில் கண் இமைகளிலிருந்தும் வருகின்றன. வெளிவந்து ஓடிவிடும் பூச்சிகளைப் புட்டியில் பிடித்தடைத்து வைத்தால் 8 நாள் வரை உயிரோடிருக்கின்றனவாம். பல வைத்தியர்களாலும் இதன் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையாம். இதனால் அம்மாதுக்கு எவ்வித தொந்தரவில்லையாம்.

### நாலுகாலுள்ள குழந்தை.

சென்ற படசத்தில் பம்பாய்ப் பகுதியில், கார்ரோவென்ற ஊரில் ஒரு ஸ்திரீக்கு நாலுகாலுள்ள பிள்ளையொன்று பிறந்திருக்கின்றதாம் அக்குழந்தை பாலைக்குடிக்க விரும்புகிறதில்லையாம்; தண்ணீரையே குடித்து வாழ்ந்துவருகின்றதாம்.

### கல்யாண முகூர்த்தம் முடிய பெண்ணிறத்தல்.

பெங்களூர் குரோஸ்பேட்டையில் சென்றவாரம் நடந்த கல்யாணத்தில் கல்யாணநாளிரவே கல்யாணப்பெண் உயிர்துறந்தாள். பெண்வீட்டார் மாப்பிள்ளையை அழைத்து வரும்பொருட்டு வீட்டிலிருந்தவர்கள் எல்லோரும் வெளியே போயிருக்கையில் பெண்ணின் புடவையில் தீப்பற்றி மிகுந்த காயமுண்டாயது முகூர்த்தத்திற்கு ஏற்பாடாயிருந்தமையால் எப்படியும் கல்யாணம் நடந்தேறியது. ஆனால் கல்யாணப்பெண் அன்றிரவே ஜன்னி கண்டு உயிர்துறந்தாள்.

## அறியா வினா.

சைவசமயத் தக்குரியவர் உயிர் துறந்தால் அவர் ஈமக்கிரியா வழக்களுக்குச் செய்யவேண்டிய அபரகிரியைகளைத் தமது சாதிர முறைப்படி செய்துவருகின்றனர். சிலருக்கு அந்தியேட்டி பிணத்திலும் சிலருக்குத் தறப்பையிலும் செய்கின்றனர். அந்தியேட்டி சைவக்குருக்கள்மாரால் செய்யப்பட்டுவருகின்றது. குருக்கள் இறந்துபோனவரின் உயிரை அந்தியேட்டியில் சிவத்தோடு கலந்துவிடுகின்றனர். அந்தியேட்டிக்கு அடுத்தநாள் வீட்டுக்குப் பிராமணர்களை அழைத்து அவ்விறந்தவர்களின் ஞாதியா சபிண்டீகரணம என்னும் ஓர் கிரியையினைச் செய்விக்கின்றனர். சபிண்டீகரணமென்பதன் பொருள் இறந்த சிவனைப் பிதிர் லோகத்துக்கு அனுப்புவது என்பதாகும். ஆகவே அந்தியேட்டியும் சபிண்டீகரணமும் தம்முள் முற்றும் மாறுபட்ட கிரியைகளாகும். சைவக்குருக்கள் சிவத்தோடு சம்யோசனம் செய்த சிவனைப் பிராமணக்குருக்கள் பிதிர் லோகத்துக்கு அனுப்புவதை யெங்ஙனம்? சைவசமய உண்மைகளை நன்குணர்ந்த பெரியோர் இதனை விளக்குக.

உடலைவிட்டு உயிர் பிரிந்துவிட்டால் இருவினைகள் அதனைப் பற்றித் தொடருமென்றும் அவ்விருவினைகளுக்குரிய சுக துக்கங்களை சுவர்க்கம் நரகம் என்னும் உலகங்களில் அனுபவித்தபின் மீண்டும் அவ்வுயிர் எஞ்சிய பாவ புண்ணியங்களுடன் பிறவியெடுக்குமென்றுஞ் சைவசமயம் கூறுகிறது. அந்தியேட்டியினாலும் நியாசங்களினாலும் உயிர்களின் பாவங்களைப் புடஞ்செய்து சிவலோகத்துக்கு ஏற்றிவிட்டால் அவை மீளப் பிறவாவென்பது உண்மையானால், மிகப் பாவஞ்செய்த ஒருவரைப் பல நியாசங்களாற் புடஞ்செய்து சிவபதம் அனுப்பிவைக்கலா மல்லவா? இதனால் இவ்வுலகில் செப தபங்களியற்றிக் கஷ்டப்பட்டுக் காலங்கழித்தலினும் சுயேச்சையாக அட்டாதுட்டிகள் செய்து வாழ்ந்து ஈற்றில் கிரியைகள் புரிந்து சிவகதியடைதல் லேசான மார்க்கமல்லவா? சுகவழியிருக்கக் கஷ்டமேன்

சைவன்

---

## சாதிச் சந்தியின் குமிறல்.

(திருவருள்நிலையம் சி சரவணமுத்து வேலணை மேற்கு முகப்பு.)
முன்னுரைத் தொடர்பு.

இவ்வாறு பொலிவுறத் திகழுகின்ற தமிழுலகத்தின் நுனியன்ன, அமைந்துள்ள நம் நாடு எம் யாழ்ப்பெரும் நாடேயாகும்; (யாழ்ப்பாணம்) இவ்வாறு அமைந்துள்ள யாழ்ப்பாண நாட்டு மக்கள்மீது நமது கருத்தைச் செலுத்துவாம் இலங்கையின் வடமுனைப்பின்கண் "ஓங்கார" வடிவுடையதாய் அமைந்துள்ள நாடே இவ்வியாழ்ப்பாண நாடாகும் இந்நாட்டில் வாழும் மக்கள் இப்பொழுது பல துறைகளிலும் நண்ணி, பலபட வாழ்கின்றார்கள். ஆகவே, இவர்களின் வாழ்வாலாய அறிவும், உணர்வும் உடையோராய் இருத்தலினால் இவர்களுள்ளும் சிறிது சிறிது பிணக்குகள் நிகழ்கின்றன இப்பிணக்கு நிகழ்ச்சிகள் எதனுக்கு நிகழ்கின்றன எனின், ஆராய்வம்

ஆராய்ந்து உணரவே இம்மக்களிடத்துமுளும் பிணக்குகள் பலதிறப்பட்டதாய், உணர்வளவாயும், சொல்லளவாயும், செயலளவாயும் மலர்வதை இன்னும் தெற்றென உணரலாம். எனவே, இவ்வாறு பலபடவதிக்கும் பிணக்குகள் யாவற்றுக்கும் "தோன்றிடம்" எங்கு என்று ஆராய்ந்தால் சமய வேறுபாட்டினின்றும், சாதி வேறுபாட்டினின்றும் மேற்குறித்த பிணக்குகளெல்லாம் தோன்றுதலைச் செவ்வனே அறியலாம். அறியவே குறித்தபிணக்கினங்களெல்லாம் சமயநெறிபுள்ளும், சாதிமுறையுள்ளும் அடங்கும். அடங்கவே, சமய முறையோ? மக்களுலகினதாகும். ஆ, யாமுணரும் இவ்வுரையோ, இப்பொழுது எம் மனோர்முன் நிலவுகின்ற சாதிப்பிரிவினையை ஆராயுமோருரையாகும்—ஆகவே, நமது கருத்தையும் நம் நாட்டுமக்களின் சாதிக்கடலில் புகுத்துவாம்

இவ்வியாழ்ப்பாண நாட்டின்கண் வதியும் சைவப் பொதுமக்களை இருகூறாகப் பிரிக்கலாம்; அவற்றுள் ஒரு திறத்தார் உயர்சாதி மக்களாயும் மறுதிறத்தார் தாழ்ந்தசாதி மக்களாயும் எங்க (வரும்.)

சி சரவணமுத்து,
திருவருள் நிலையம்,
வேலணை

---

## செல்வம்.

(முற்றொடர்.)

அரிய நண்பர்காள்!

நான் புகல்வதற்குச் சற்றுச் செவிசாயுங்கள். கடன்படுவதால் வரும் இடைஞ்சல்களை முன் படித்திருக்கின்றீர்கள். ஆகையாற் கடன்படாற் கேவலம் என்பதை மறவாதொழுகுங்கள், அப்படியிருந்தும் கடன்படவேண்டில் உங்களுங்கள் வருவாய்க்குத் தகுந்ததாய்க் கடன்படல்வேண்டும். கடன்படுவதும் ஒருவரிடத்திலேயே படவேண்டும் அங்ஙனம் கடன்படும்போது ஓர் தவணையைக் கூறி அத்தவணைக்கிடையிற் கொடுக்கத் தெண்டிக்க வேண்டும். இதை விடுத்துக் கடன் தருகின்றார்கள்தானே என நினைந்து பல இடங்களிலுஞ் சென்று கடன்பட்டால் "இரு தோணியிற் கால் வைத்தவன் சமுத்திரத் தமிழ்ந்திய பான்மைபோல்" உங்கட்கும் வருமென்பதை மறந்துவிடாதீர்கள். இதை முன்னிட்டன்றோ கல்வியிற் கீர்த்திவாய்ந்த கம்பரும்,

"விடங்கொண்ட மீனைப்போலும் வெந்தழல் மெழுகுபோலும், படங்கொண்ட வரவின்வாய்த் தேரையைப்போலும், திடங்கொண்ட ராமபாணஞ் செருக்களத் துற்றபோது, கடன்கொண்டார் நெஞ்சம்போலக் கலங்கினா னிலங்கைவேந்தன்"
(இராமாயணம்)

என ஸ்ரீ ராமருடைய பாணத்திற்கஞ்சிய இராவணனைக் கடன்பட்டார் நெஞ்சத்திற் கொப்பிடுகின்றார். ஆதலால் கடன்படுவதைக் குறைக்கத் தெண்டியுங்கள் அப்போதான் மேன்மக்களெனப் பேர் பெறுவீர்கள். இன்னும்,

"அறிஞர்க்கழகு வறுமையிற்செம்மை"
(நறுந்தொகை)

எனவுங் கூறி இருத்தலால், உங்கட்கு வறுமை வந்துவிட்டதே என வெண்ணி உங்கள் மானத்தை இழவாமலும், பொய் களவு முதலிய தீயாய பாவங்களைப் புரியாமலும், ஒழுக்கமாயிருக்கவேண்டும்

"எழுதியவாறேகா ணிரங்குமடநெஞ்சே
கருதியவாறுமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா
முற்பவத்திற் செய்த வினை" [மீக்கதேன்
(மூதுரை)

என்ற பான்மையாய் நீங்களும் எல்லாம் வல்ல இறையோன் செயலே எனச் சொல்லி மௌனமாயிருந்தால், ஈஸ்பரன் உங்களை மேன்மையான அந்தஸ்தில் வைப்பார் என்பதை மெய்யென உணருங்கள். சிறக: இதின்படியே நடந்து மேன்மக்களெனப் பெயரெடுத்தாற் போதுமென் றெண்ணவேண்டாம் நேயர்காள்! எந்நேரமும எம நிழல்போல் எம்மைவிட்டுப் பிரியாது எமக்கு வேண்டுவன வென்னவோ அவற்றையெல்லாங் குறைவற வீந்து எங் கண்ணிற் றெரியாது எம்மகத்தையே ஆசனமாகக் கொண்டருளும் ஏகபரம்பொருளை இடைவிடாது ஸ்தோத்திரித்து, அவரது கற்பனைகளைக் கைக்கொண்டு வருவோமாயிருப்பின், அவரால் அளிக்கப்படும் அருட்செல்வத்தையும் பொருட்செல்வத்தையும பெறலாகுமே. இதையொழித்து அநேகர் இவ்வழிந்து போகுஞ் சடலத்திற்காகத் தத்தம சிவ்யத்திலன்றுடன்று வயிறு நிறைந்தாற் போதுமென வருந்தி உழைக்கின்றார்களேயன்றி, என்றுமழியா வான்மாவைத் தந்த ஈஸ்பரனைத் துதித்து வருபவராய்க் காணவில்லை அந்தோ! பிரிய தோழரே! நீங்களெவ்விதமாயேனும்,

"வருந்தி யழைத்தாலும் வாராதவாரா [தேங்கி பொருந்துவன போமினென்றாற் போகா-இருந் நெஞ்சம புண்ணாக நெடுந்தூரந்தா னினைந்து துஞ்சுவதே மாந்தர் தொழில்". (நல்வழி)

எனக் கூறியிருத்தலால், அத்தனாலன்றி உங்கள் குறைகளைத் தவிர்க்க வேறு யாராலாயினும முடியுமா? இல்லையே! ஆகையால் "செல்வம வேண்டிற் பரனைப் பணிகுக" என்னும் அமிர்தவாக்கைக் கடைப்பிடித்தொழுகுங்கள். இங்ஙனமே அக்கருணைத்தடங்கடலாகிய அம்பரனைத் துதித்து, நிதிக்கடலி லாழ்ந்து வாழுங் காலத்தில், அவற்றைச் செலவழிக்க வகையறியாது பூதம்போல் வைத்துக் காத்து இறந்துபோகும மாந்தர்களைக் குறித்து அவர்களது அறிவீனத்தை வெளிப்படுத்துமாறு,

"பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்துமண்மேல், இறக்கும்பொழுது கொடு போவதில்லை இடைநடுவிற், குறிக்குமிச்செல்வம் சிவன்தந்ததென்று கொடுக்கறியா(து), இறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே". (ஞானக்கோவை)

எனப் பாடிய பட்டினத்துப்பிள்ளையார் பாடலைக் கண்ணுறவில்லையா? இன்னும்,

"பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக், கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங், காவிதான் போயினபின் பாரே யநுபவிப்பார், பாவிகா ளந்தப் பணம்".
(நல்வழி)

என்ற பாடலை நீவிர் கலாசாலையிற் கல்விபயிலும்போதாவது படித்துக்கொள்ளவில்லையா? "காதற்ற ஊசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே" என்றபான்மையாய் நீங்களிறக்கும் போது, உங்களோடு கூடிவருவதென்ன? நீங்கள் செய்த பாவ புண்ணியமன்றி வேறு யாதேனுமுண்டா? ஒன்றுமில்லையே! ஆகையால் நீங்கள் தேடிய செல்வத்தைக் கடவுளுக்கு ஏற்கும் விதமாகச் செலவழித்து, அவரது திருவருளைப பெற முன்னில்லுங்கள். இவ்விதமாகவும், இன்னும் நன்மையான வழிகளையுந் தேடி யெடுத்து நடந்துகொண்டாற்றான் இவ்வுலகில் மேன்மக்களென்றும் மறுவுலகில் பாக்கியம் பெற்றவர்களென்றுங் கூறப்படுவீர்கள். போக, இந்நகரத்தின்கண்ணே வசிக்குஞ் செல்வச்சீமான்கள் தங்கள் பணத்தை வீணிற் செலவழிக்க முயன்று, மதுபானமருந்துவதிலேயும், தாசிக்கிடுவதிலேயும், முகஸ்துதி கூறுபவர்க் களியிறைப்பதிலேயும், கூத்து பயஸ்கோப் முதலிய கண்காட்சிகளில் தத்தம் அரும் நேரத்தைச் செலவழிப்பதோடு, பணத்தையு மிழந்து டம்பாசாரிகளெனப் பெயரையுஞ் சூடிக்கொள்கின்றனர். அம்மம்ம! ஐயன்மீர்! நீங்கள் உங்கள் பணத்தையு மிழந்து வீணே வம்புப்பெயர் கேட்பதென்றால், உங்களுக்கு வெட்கமில்லையா? ரோசமில்லையா? மானமில்லையா? மரியாதையில்லையா? ஆகையால், இன்றே இக்கொடிய செயல்களை நிறுத்தி, என்று மழியா வீன்பரனை நினைந்து அவருக்கேற்கும்பொருட்டு நடந்து நல்லோரெனப் பெயரெடுக்கத் தெண்டியுங்கள். இப்படியிருந்தாற்றான் உங்கள் செல்வம் நிலைநிற்பதோடு, அத்தனை லளிக்கப்படும் அருட்செல்வமாகிய திருச்செல்வத்தையும் பெற்று, என்று மழியாப் புகழுமுற்று, சிருஞ்சிறப்புமாய்ச் செழிக்க வாழ்வீர்களென்பதைப் பன்முறையுங் கூறுகின்றேன்.

இங்ஙனம்,
M. P. A.,
பலாலி.

